## 2019 அக்டோபர் மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of October 2019

| | | |
|---|---|---|
| 04th Oct<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஓர்ஷிப் ஹால் |
| 11th Oct<br>7:00PM – 9:00PM | மாலைஆராதனை | மெயின் ஓர்ஷிப் ஹால் |
| 18th Oct<br>5 PM – 10 PM | அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகைஆராதனை | மெயின் ஓர்ஷிப் ஹால் |
| 19th Oct<br>7:00PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம் ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 25th Oct<br>7:00PM – 9:00PM | மாலைஆராதனை<br>Champs for Christ | மெயின் ஓர்ஷிப் ஹால் |
| 31st Oct<br>11:30PM-12:30AM | மாத இறுதி / மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

**திருச்சபையின் ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.**
**050 586 8173 / 056 441 1225 / 050 482 1006**

### உள்ளே


ஆயர் மடல்
திருமறை தியானப்பகுதி
செயலரிடமிருந்து
வேதாகம களஞ்சியம்
மிஷனரி சுயசரிதை
கட்டுரைகள்
Youth Special
பாடல் பிறந்த கதை
Children's Corner
வேத வினா விடை போட்டி
பிறந்த நாள்
திருமண நாள்
தெரிந்து கொள்வோம்
தினசரி வேதவாசிப்பு


## CSI தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

**மெயின் ஓர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் மருத்துவமனை வளாகம், அல்–அய்ன்**
Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st& 3rd Fridays / வெள்ளி | *7:00 PM* | Communion Service /திருவிருந்து ஆராதனை |
| 1st& 3rd Fridays / வெள்ளி | *6:30 PM* | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *7:00 PM* | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *6:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Friday's / வெள்ளி | *6:15 PM* | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

## ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1stFriday / வெள்ளி | *11:00AM* | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | *7:00 PM* | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | *7:30 PM* | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | *7:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | *11:30PM* | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |

# ஆயர் மடல்...



## வருடாந்திர அறுவடை ஸ்தோத்திரப் பண்டிகை வாழ்த்துக்கள்!

அன்புக்குரியவர்களே,

நம் அருள்நாதர் இயேசு ஒவ்வொரு நாளும் நம்மை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை எதினால் உணரலாம் என்றால்?

அனுதினமும் நம் வாழ்க்கையிலே நாம் அனுபவிக்கின்ற பல்வேறு வகையான அனுபவங்கள் மூலமாக உணரலாம், கசப்பான மருந்தைப்போன்ற அனுபவங்களாக இருக்கலாம்! தேனைப்போன்ற இனிமையான அனுபவங்களாக இருக்கலாம்! உச்சபச்ச சமாதான, சந்தோஷமாக இருக்கலாம்! அல்லது உச்சபச்ச துக்கம் நிறைந்த சமாதானமற்ற சூழலாகவும் இருக்கலாம்! எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், வேதனையான அனுபவங்களிலும் கர்த்தராகிய இயேசு நம்மைக் கைவிடாத அனுபவமும், ரோமர் 8:28ன்படி அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறதென்று அறிந்திருக்கின்ற, ஆழமாய் உணர்ந்திருக்கின்ற நாம்! நன்றியுணர்வோடு! நம் அருள்நாதர் இயேசுவின் ஊழிய வளர்ச்சிக்காக நாம் மனமகிழ்ச்சியோடு கொண்டாடுகின்ற பண்டிகை தான் வருடாந்திர அறுவடை ஸ்தோத்திர பண்டிகை! 18th October 2019.

உங்களையும்,உங்கள் குடும்பத்தையும் மறவாதபடி எப்பொழுதும் உங்களையே, உங்களுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியையே நினைத்துக் கொண்டிருக்கிற இயேசுவின் ஊழியம் தேய்ந்து விடாதபடி! இந்த தேசத்தில் வளர்ந்து பெருகும்படி கொண்டாடுவோம்! ஸ்தோத்திரப் பண்டிகையை.

இப்படிக்கு,
உங்கள் ஆயர்
**Rev. Christopher Rajendran**

# திருமறை தியானப்பகுதி

**"காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்."**

**And sold their possessions and goods, and parted them to all men, as every man had need.**
**Acts 2:45**

ஆதித்திருச்சபையின் ஆரம்பமே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தி' னால் நிரம்பிவழிந்தது. பரிசுத்தஆவியினால் விசுவாசிகளின் இருதயங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டது. (Members of the Early Church were interconnected with the Web of the Holy Spirit. Their hearts, minds and their attitudes were strongly Empowered by Holy Spirit. As Holy Spirit led children of God and Sons and Daughters of the Kingdom of God as per Romans 8, they practice the ways of the Kingdom of God Acts 2:42-4:32, they displayed Radical Generosity Acts 2:45; 4:34-35).

ஒரே ஆவிக்குரிய இருதயத்தைப் பெற்ற பல்வேறு குடும்பங்களாக சரீரப்பிரகாரமாக ஆதித்திருச்சபையிலே இணைந்தவர்கள், சரீரத்தில் ஒரு உறுப்பு வறுமையினால் துன்பப்படுவதை சகித்துக் கொள்ளமுடியாமல், தங்களிடத்தில் தேவைக்கு அதிகமாக இருக்கிற நிலங்களை, காணியாட்சிகளை, அசையும் அசையா சொத்துக்களை, திராட்சைத் தோட்டங்களை, குடியில்லாத வீடுகளை (தாங்கள் குடியிருக்கும் வீடுகளையல்ல) விற்று, (தங்கள் மனதில் தேவனுக்கு பொருத்தனையாக நியமித்துக் கொண்ட சொத்துக்களை விற்று), முழுத்தொகையை அப்போஸ்தலரின் பாதத்திலே வைத்தார்கள் (Acts 4 :34,35).

அந்தப் பொருத்தனைக் காணிக்கைகளை வைத்துத்தான் ஆதித்திருச்சபையின் ஊழியங்கள் கட்டியெழுப்பப்பட்டது. அநேகர் முழு நேர ஊழியங்களில் விசுவாசத்தோடு இணைந்திருந்தார்கள். அநேகர் தொழில்களைச்செய்து கொண்டே ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இன்னும் அநேகர் தங்கள் விசுவாசத்திற்காக

துன்பப்படுத்தப்பட்டு எல்லாவற்றையும் இழந்தார்கள். திடீரென இழப்பு தெருவில் நிற்கவேண்டிய நிலையேற்பட்டது. இச்சூழலில்தான் தங்களுடைய தேவைக்கு அதிகமாக இருந்த அசையும், அசையாச்சொத்துக்களை வசதிபடைத்த விசுவாசக் குடும்பத்தாரோடு பரிசுத்த ஆவியானவர் அவர்களது உள்ளத்திலே பேசி, ஆதித்திருச்சபையிலே அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. (Acts 4:34,35 There was not a needy person among them, what a glorious Generosity, really radical by the powerful influence of the Holy Spirit). 36,37வது வசனங்களில் பர்னபாவின் Radical Generosity ஐப்பார்க்கிறோம். தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். ஆனால் 5ம் அதிகாரத்திலே அனன்யா, சப்பீராள் தம்பதிகள் தங்கள் காணியாட்சியை விற்றும் ஏன் மரிக்கிறார்கள்? நாம் சற்று ஆழ்ந்து தியானிக்க வேண்டிய பகுதி!

ஆதித்திருச்சபையில் விசுவாசிகளுடைய வாழ்க்கையிலே பாதுகாப்புணர்வை கொடுத்தது சொத்துக்களலல்ல, திருச்சபை மக்களின் அந்நியோன்னிய ஐக்கியம், நெருங்கிய உறவு.எல்லாவற்றிற்கும் மேலாக திரியேக தேவனோடு கொண்டிருக்கிற நெருங்கிய உறவு. தங்கள் அனுதின திருச்சபை, விசுவாச வாழ்க்கையிலே நடக்கிற அதிசயங்கள், அற்புதங்கள். தேவனையே பரிசுத்த ஆவியானவர் பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக்கொண்டிருந்த காலகட்டம். விசுவாசிகள் கண்களுக்கு தேவவல்லமை வெளிப்பட்டுக்கொண்டே இருந்த ஒரு ஆவிக்குரிய வல்லமையான சூழல் (Acts 5:12-16 அப்போஸ்தலருடைய நிழலில் அதிசயங்கள் வெளிப்பட்ட சூழல்).

ஆதலால் திருச்சபை உறவே நிலையானது என்றுணர்ந்து தேவனுக்கு கொடுப்பதை மிகவும் சந்தோஷத்தோடே, குழந்தையைப் போன்று கபடமில்லாமல், கணக்குப்பார்க்காமல்,(with innocence), வஞ்சகமில்லாமல் கொடுத்தார்கள். அனன்யா, சப்பீராள் குடும்பம் நேர்ந்து கொண்டதை பரிசுத்த ஆவியானவர் மனதிலே அறிவார். அவர்கள் பொருத்தனையாக நேர்ந்து கொண்டது ரூபாய் 1 லட்சமென்றால், செலுத்த வந்தது ரூபாய் 10,000, ஆக இருந்திருக்கலாம் அல்லது 100 ரூபாயாக

இருந்திருக்கலாம். ஆதலால் தான் துணிந்து தேவ சமூகத்திலே பொய் சொல்லி, வஞ்சித்த படியால் அவர்களே உண்மை வெளிப்படுத்தப்பட்ட பொழுது, தேவனுக்கு பயந்து அவர்கள் இருதயம் நின்று மாண்டு போனார்கள். கண்டிப்பாக கர்த்தர் மன்னித்து பரலோகத்திலே அவர்களுக்கு இடமுண்டு, ஆனால் நித்திய ஆசீர்வாதங்களின் பரோகலோகப் பொக்கிஷச்சாலையிலே குறைவு ஏற்ப்பட வாய்ப்புக்கள் அதிகம்.

வருகிற ஸ்தோத்திர பண்டிகையிலே பரிசுத்த
ஆவியானவரின் ஏவுதலின்படி தாராளமாய், திராணிக்குத்தக்கதாக
ஸ்தோத்திரப் படைப்புக்களை படைத்து திருச்சபையின்
ஊழியங்களை தாங்கி நித்திய பாதுகாப்புணர்வையும், நித்திய
ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்வோமாக..!

அன்புடன்... உங்கள் ஆயர்,
Rev. M. Christopher Rajendran



எந்த அளவிற்கு ஒரு மனிதன்
தேவனுடன் நெருங்கி வாழ்கிறானோ,
அந்த அளவிற்கு தன்னுடைய
துன்மார்க்க
இருதயத்தைக்குறித்து துக்கப்படுவான்...

# செயலரிடமிருந்து...

பிரியமானவர்களே...

கிருபையாய் நம்மை மீண்டும் ஒரு மாதத்தை காணச்செய்தவரும் நான் உனக்கு முன்னே போய் கோணலானவை செவ்வையக்குவேன் என்று நமக்கு முன் கடந்து சென்று பாதைகளை செவ்வைப்படுத்துகிறவரும்; இனி வரும் அத்தனை நாட்களிலும் அனைத்து காரியங்களிலும் நம்மை வெற்றிச்சிறக்க பண்ணுகிறவரும்; பர்வதங்களையும் மெழுகு போல் உருகப்பண்ணி தடைகளை அகற்றுபவராக முன்செல்லும் சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய பெலத்தோடு புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள திருச்சபை மக்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். சென்ற மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். ஒன்றிணைந்து ஜெபத்தாலும் தங்களுடைய விலைமதிக்கமுடியாத நேரத்தை கொடுத்ததும் செயல்பட்ட அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துகளும் நன்றியும் உரித்தாக்குகிறேன்.

வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். இந்த மாதம் 18ஆம் தேதி நடைபெறவிருக்கும் நமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகைக்காக, 25ஆம் தேதி நடைபெறவிருக்கும் Champs for Christ-Kids Competition'க்காக அனுதினமும் ஜெபியுங்கள்.

திருச்சபையின் அனைத்து ஊழியங்களில் உற்சாகத்தோடு பங்குபெறுங்கள். உங்களது அனுதினஜெபம் மாதாந்திர பொருளுதவி, ஊழியத்தின் கரிசனைக்காக தேவனை துதிக்கிறேன். கர்த்தர் மென்மேலும் உங்களையும், உங்கள் குடும்பத்தார் அனைவரரையும் ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்கள் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக..

இப்படிக்கு ...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
S. சுரேஷ் ராஜன்

# உட்காராதே... Don't Just Sit there...

1) பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் (சங் 1:1,2

2) வீணரோடு (வீணாக நேரத்தை போக்குபவர்கள்) உட்கார கூடாது (சங் 26:4)

3) அவிசுவாசிகளோடு உட்கார கூடாது (லூக் 22:55)

4) சகோ/சகோதரிக்கு விரோதமான பேச்சுகள் பேச உட்கார கூடாது (சங் 50:20)


5) துன்மார்க்கர் உட்காரும் இடத்தில் (சங் 26:5)

6) பொல்லாத மனுஷர் உட்காரும் இடத்தில் (நீதி 24:1)

7) பெருமைக்கு உட்கார கூடாது (லூக் 14:8,9)

8) மாய்மாலம் பண்ண உட்கார கூடாது (எசேக் 33:31)

**ஒரு விசுவாசி, வேண்டுமென்றே, விருப்பத்துடன், தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யும்பொழுது, சிறு காற்றும் பெரும் சூறாவளியாக மாறுகிறது...**





## தினமும் வேதம் வாசி...

ஒரு சாதாரண மனிதன் 70 மணி நேரத்தில் பைபிளை தொடர்ந்து படித்து முடித்து விடலாம்.

ஒரு நாளைக்கு 3 அதிகாரம் – ஞாயிற்றுக் கிழமை 5 அதிகாரமாக படித்தால் ஒரு வருடத்தில் படித்து விடலாம்.

ஒரு நாளைக்கு 14 அதிகாரம் படித்தால் 3 மாதத்தில் படித்து விடலாம்.

# மிஷனரி சுயசரிதை / Missionary Biography




ஃபென்னி க்ரொஸ்பி: – (1820–1915).

**“ஜெபத்தை கேட்க்கும் எங்கள் தேவா”** என்ற பழைய பாடலை பாடாத கேட்டிராத கிறிஸ்த்தவர்கள் இருக்க முடியாது. அந்த பாடல் “Blessed assurance Jesus is mine” என்ற ஆங்கில பாடலில் இருந்து தமிழாக்கம் செய்யப்படுள்ளது. ஆங்கிலத்தில் அந்த பாடலை எழுதிய பாடலாசிரியரை பற்றி நாம் நிச்சயம் அறிந்து கொள்ள வேண்டும். 8000 திற்கும் அதிகமான பாடல்களை எழுதியுள்ள அவர் கண்பார்வையற்ற ஒரு பிரபல அமெரிக்க பெண் ஆவார். அந்த பாடலாசிரியையின் பெயர் ஃபென்னி க்ரொஸ்பி.

1820 ம் வருடம் மார்ச் மாதம் 24 தேதி, நியூ யார்க் அருகே ப்ருஸ்டர் என்ற இடத்தில பிறந்தார். க்ரொஸ்பி பிறந்த ஆறு வாரங்களில் குளிர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். மருத்துவர் ஒருவரது தவறான பராமரிப்பினால் பிறந்த 6 வாரங்களிலேயே தனது கண் பார்வையை இழந்ததுடன், ஒரு வயது பூர்த்தியாகும் முன்பே தன் தகப்பனையும் இழந்தாள்.

தன் தாயுடனும் பாட்டியுடனும் வாழ்ந்த வந்த ஃபென்னி க்ரொஸ்பி சிறு வயதிலிருந்து நான்கு சுவிஷேசப் புத்தகங்களையும், பழைய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களின் பெரும்பாலான பகுதிகளையும் மனனம் செய்திருந்தாள். 14

வது வயதில் நியூயோர்க் நகரிலுள்ள குருடர் பாடசாலையில் பயில தொடங்கிய ஃபென்னி க்ரொஸ்பி அங்கு 8 வருடங்களாக மாணவியாகவும் பின்னர் 15 வருடங்களாக ஆசிரியையாகவும் இருந்தாள். இவள் தனது 8 வது வயதில் எழுதிய கவிதை "என்னால் பார்க்க முடியாவிட்டாலும் நான் எவ்வளவு சந்தோஷமானவள்' என்று ஆரம்பமாகியது.

ஃபென்னி க்ரொஸ்பி, தனது 30 வயது வரை பார்வையற்றவர்களுக்காக சமூக சேவை செய்துவந்தார். பல்வேறு சலுகைகளை அரசிடம் இருந்து பெறுவதிலும் பார்வையற்றவர்களுக்காக போராடுவதிலும் முனைப்புடன் செயல்பட்டார். பார்வையற்றவர்களுக்கான பள்ளியில் ஆசிரியராகவும் செயல்பட்டு வந்தார். 1850 –ல் Methodist Episcopal Church –ல் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்தில் இயேசுகிறிஸ்த்துவால் தொடப்பட்டு தனது வாழ்க்கையை கிறிஸ்துவுக்காய் அர்ப்பணித்தார்.

1858–ம் வருடம் "அலெக்ஸாண்டர் வான் அல்ஸ்டைன்" என்ற பார்வையற்றவரை திருமணம் செய்தார் ஃபென்னி க்ரொஸ்பி.

1859–ம் வருடம் ஒரு அழகான பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அந்த குழந்தை டைபாய்டு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பிறந்து ஒரு நாட்களிலே இறந்து போனது. மனமுடைந்த ஃபென்னி க்ரொஸ்பி இறக்கும் வரை ஒரு சோக நிகழ்வாகவே கருதினார். ஆயினும் தனக்கு கர்த்தர் கொடுத்திருந்த பாடல் எழுத்தும் தாளந்தை எந்த சூழ் நிலையிலும் அவர் நிறுத்தி விடவில்லை. அநேக பாடல் கச்சேரிகளை நடத்தி அதன் மூலம் வந்த வருவாயில் ஏழைகளுக்கு உதவி வந்தனர். அதன் பின்னர் அலெக்ஸாண்டரை பிரிந்த ஃபென்னி க்ரொஸ்பி கிறிஸ்துவிக்காய் தொடர்ந்து பாடல்களை எழுதி ஊழியமும் செய்து வந்தார்கள்.

ஃபென்னி க்ரொஸ்பி, முழங்காற்படியிட்டு ஜெபிக்காமல் எந்த ஒரு பாடலையும் எழுதத் துணிவதில்லை. ஒரு தடவை இசையமைப்பாளரால் அனுப்பப்பட்டிருந்த ராகத்திற்கு ஏற்றபடி உடனடியாக ஒரு பாடலை எழுத வேண்டியிருந்தது. ஃபென்னி க்ரொஸ்பி எவ்வளவு முயன்றும் அவளால் குறிப்பிட்ட ராகத்திற்கு ஏற்ற பாடலை எழுத முடியாமல் போய்விட்டது.

> ஃபென்னி க்ரொஸ்பி, முழங்காற் படியிட்டு ஜெபிக்காமல் எந்த ஒரு பாடலையும் எழுதத் துணிவதில்லை.

அப்போதுதான் தான் ஜெபிக்காமல் பாடலை எழுதத் தொடங்கியதை உணர்ந்த ஃபென்னி க்ரொஸ்பி ஜெபித்துவிட்டு மறுபடியும் பாடலை எழுதத் தொடங்கினாள். அன்று அவள் எழுதிய பாடல் "இயேசுவே என்னை சிலுவையினருகில் வைத்துக் கொள்ளும்". (Jesus keep me near the cross) என ஆரம்பிக்கும் மிகவும் பிரசித்தி

பெற்ற பாடலாகும். 1874 இல் ஃபென்னி க்ரொஸ்பி ஒரு குறிப்பிட்ட காரியத்திற்குத் தேவையான பணத்தில் 5 டாலர்கள் குறைவாய் இருந்தது, எவரிடமும் போய்க் கேட்பதற்கும் நேரம் இருக்கவில்லை. உடனே அவள் பணத்திற்காக ஜெபித்துவிட்டு, தனது அடுத்த பாடலை எழுத் தொடங்கினாள். அச்சமயம் அவள் வீட்டுக்கதவு தட்டப்பட்டது.

வாசற்கவைத் திறந்தபோது “தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக“ எனும் வாழ்த்துக்களுடன் ஒரு மனிதன் அவளது கையை குழுக்கிவிட்டுச் சென்றான். அம்மனிதன் அவளது கையை குலுக்கும்போது அவளது கையில் 5 டாலர்கள் வைத்திருந்தான். உடனே முழங்கால்படியிட்டுத் தனக்குத் தேவையான 5 டாலர்கள் கிடைத்ததற்காக நன்றி செலுத்தி ஜெபித்த ஃபென்னி க்ரொஸ்பி, தனது அடுத்த பாடலை எழுதத் தொடங்கினாள். அதுவும் உலகப் பிரசித்தப் பெற்ற ஒரு பாடலாயிற்று. “சகல வழிகளிலும் என் இரட்சகர் என்னை நடத்துகிறார்“ என ஆரம்பமாகும் பாடலே அதுவாகும். (All the way my saviour leads me)

ஒரு தடவை கிறிஸ்தவப் பிரசங்கி ஒருவர் ஃபென்னி க்ரொஸ்பியிடம் “தேவன் உனக்குப் பல வரங்களைக் கொடுத்திருந்தாலும் பார்வையைக் கொடுக்காமலிருப்பது உண்மையிலேயே வேதனைக்குரிய ஒரு காரியமே” என்றார். ஃபென்னி க்ரொஸ்பியோ உடனடியாக “ நான் பிறந்த உடன் தேவனிடம் ஒரு கோண்டுகோள் விடுக்கக்கூடியதாயிருந்தால், நான் பிறவிக் குருடியாகவே இருக்க விரும்புகிறேன் என்றே கேட்டிருப்பேன்’ என்றாள். ஃபென்னி க்ரொஸ்பியின் பதிலைக் கேட்டு ஆச்சரியப்பட்டு ”ஏன்?” என்று கேட்ட பிரசங்கியிடம் அவள் “நான் பரலோகத்திற்குச் செல்லும்போது என் இரட்சகர் இயேசுவைப் பார்ப்பதே என்னை முதலில் மகிழ்விக்கும் காட்சியாக இருக்கும்” என்று பதிலளித்தாள்.

சரீரத்தில் ஊனம் இருந்து கண் தெரியாமல் இருந்தாலும், இருதயத்தில் கிறிஸ்த்துவுக்காய் சாதிக்கும் வைராக்கியம் பற்றி எரிந்து கொண்டே இருந்தது. ஃபென்னி க்ரொஸ்பி தனது அறுபது வயதில் தனது வாழ்க்கையை ஏழைகளுக்காக அர்ப்பணித்து வாழ்நாள் முழுவது அவர்களுக்கு பணிசெய்து வாழ்ந்தார்.

நினைத்து பாருங்கள் கண் தெரியா முதிர் வயது கர்த்தருக்காய் எவ்வளவாய் சாதித்திருக்கிறார் என்று. **குறைவுகளை நினைத்து கவலைப்படுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. எல்லா மனிதருக்கும் ஏதோ ஒரு குறைவு இருக்கின்றது. குறைவிலும் நாம் இயேசுவுக்குள் மகிழ்ச்சியாக இருப்பதே சிறந்தது.** 94 வருடங்களாகக் கண்பார்வையற்றவளாக வாழ்ந்த ஃபென்னி க்ரொஸ்பி தேவனை மகிமைப்படுத்துவதற்கும் அவரைப் பற்றி மற்றவர்களுக்கு அறிவிப்பதற்கும் பாடல்களை எழுதுவதில் மனமகிழ்வுடன் ஈடுபட்டார்கள்.

# “உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக”

## (யோவான் : 14 : 27)

**இயேசு** கிறிஸ்து உலகத்தில் வந்த போது கொடுக்கப்பட்ட முதல் செய்தி “பயப்படேதேயுங்கள்” அதைப் போல இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த போது கொடுக்கப்பட்ட முதல் செய்தியும் “பயப்படாதிருங்யள்” என்பதே. நம்முடைய வேதத்தில் நம்மை தேற்றும் படி அதிகமாக சொல்லப்பட்ட வார்த்தைகளில் ஒன்று “பயப்படாதே”

***நாம் ஏன் பயப்படக்கூடாது ?***

நம் அன்பின் ஆண்டவர் நம்மைப் பார்த்து கூறுகிறார் “பயப்படாதே நான் உன்னு டனே கூட இருக்கிறேன்” என்று. அன்று இஸ்ரவேல் ஜனங்களோடு இருந்து அவர்களை வழி நடத்திய தேவன் இன்றும் நம்மோடு கூட இருக்கிறார் நமக்கு முன்பாக கடந்து போகிறார். காரணம், நாம் அவருடையவர்கள். தீர்க்கன் சொல்லுகிறான் “இப்போதும் யாக்கோபே, உன்னை சிருஷ்டித்தவரும், உன்னை உருவாக்கிய வருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னை பெயர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்” (ஏசாயா 43:1). இப்படி எந்த சூழ்நிலையிலும் நாம் பயப்படாமல் இருக்க நமக்கு வாக்குத்தந்த நம் தேவன் எப்படிப்பட்டவர்.

- ***நம்மை சிருஷ்டித்தவர்*** : வேதம் கூறுகிறது “உன் மீட்பரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கின வருமான கர்த்தர் சொல்லுகிறதாவது; நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்” (ஏசாயா 44:24). சுங்கீதக்காரன் தாவீது கூறுகிறார் நம்முடைய கருவை அவர் கண்கள் கண்டது நம்முடைய தாயின் கர்ப்பத்தில் நம்மை காப்பாற்றியவரும் அவரே.

- ***நம்மை மீட்டுக்கொண்டவர்:*** அப்போஸ்தலனாகிய பவுல் பேதுருவுக்கு எழுதும் போது கூறுகிறார் நாம் “அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத

மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள்'' (1 பேதுரு 1 : 18 , 19) என்று. ஆம் அவருடைய விலையேறப் பெற்ற இரத்தத்தால் நாம் மீட்கப்பட்டிருக்கிறோம்.

❖ ***நம்மை பேர் சொல்லி அழைத்தவர்*** :ஏசாயா தீர்க்கன் வாயிலாக நம்மைப் படைத்தவர் நமக்கு சொல்லுகிறார் "உன்னை பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே யென்று நீ அறியும்படிக்கு, வெண்கலகதவுகளை உடைத்து, இருப்பு தாழ்ப்பாழ்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதயல்களையும் உனக்குக் கொடுப்பேன்.''(ஏசாயா 45: 3,4). நம்மை பெயர் சொல்லி அழைத்து பொக்கிஷங்களையும் புதயல்களையும் ஆசீர்வாதமாக தருகிற நம் தேவன் எவ்வளவு பெரியவர்.

❖ ***நீ என்னுடையவன் என்று சொந்தம் பாராட்டியவர்:*** நாம் தேவனுக்கு மிகவும் விசேஷமானவர்கள், ஏனென்றால் பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் நம் தேவனாகிய கர்த்தர் நம்மை தமக்கு சொந்தமாய் இருக்கும் படி தெரிந்து கொண்டார். " நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை தமக்கு சொநதமாயிருக்கும் படி தெரிந்து கொண்டார்'' (உபாக 7:6).

❖ ***நம்மை சினேகிக்கிறவர்***: தேவன் கூறுகிறார், "நீ என் பாாவைக்கு அருமையானபடியினால் கனம் பெற்றாய்: நானும் உன்னை சினேகித்தேன் ''(ஏசாயா 43:4). நாம் அவருடைய அன்பிற்கு தகுதியானவர்கள் அல்ல, ஆனாலும் தேவன் தம்முடைய சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்தில் அனுப்பி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

❖ ***நமக்கு தம்முடைய நாமத்தை தரித்தவர்:*** நாம் நம்முடைய தேவனை அறியாதிருந்தும், அவர் நம்மை பெயர் சொல்லி அழைத்து நமக்கு அவருடைய நாமத்தை தரித்தார். "நான் உன்னை பெயர் சொல்லி

அழைத்து நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு நாமம் தரித்தேன்" (ஏசாயா45:4).

அருமையானவாகளே! நம் தேவன் கூறுகிறார் "யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை, நீ என் தாசன், நான் உன்னை உருவாக்கினேன், நீ என் தாசன், இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை"(ஏசாயா 44:21). இவ்வளவு மகத்துவமான தேவனை தெய்வமாக கொண்ட நாம் பாக்கியவான்கள் அல்லவா? நம்மை உறங்காமல் தூங்காமல் பாதுகாத்து நம்மேல் கண்ணோக்கமாயிருந்து விசாரிக்கிற தேவன் நம்மோடிருக்க நாம் ஏன் கலங்க வேண்டும் பயப்படவேண்டும்.

சிந்திப்போமா ? தேவன் நம்மை தம்முடையவர்களாகத் தெரிந்து கொண்டார். தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களாகிய நாம் ஏன் கலங்க வேண்டும் ? ஏன் பயப்பட வேண்டும் ?.

**M. Nesamony.**

**"Pain is pain. Broken is broken. Fear is the biggest disability of all. And will paralyze you more than you being in a wheel chair."**
**Nick Vujicic**





# கிறிஸ்துவின் தூய இரத்தம்



மரண தண்டனை விதிக்கப்பட்ட கள்வன் ஒருவன் அமைதியின்றி சிறையில் உலாவிக் கொண்டிருந்தான். அப்போது அங்குவந்த தேவ ஊழியர் ஒருவர், வேதபுத்தகம் ஒன்றை அவனுக்கு கொடுத்து... **"இதை வாசி..... இது உனக்கு ஆறுதல் அளிக்கும்"** என்றார். ஆனால் அவன் அதை அலட்சியமாக தூக்கி எறிந்து விட்டான்!

அன்று இரவு அவன் ஒரு கனவு கண்டான். அதில் தூரத்தில் ஒளி மயமான ஒரு இடத்தில் காலம் சென்ற அவன் தாயார் நிற்பதைக் கண்டான்! அவர்கள் அன்புடன் அவனை அழைக்கவே அவனும் விரைந்து ஓடினான்! ஆனால் குறுக்கே ஒரு பெரிய மலையொன்று தோன்றி அவனை தடுத்து நிறுத்திவிட்டது!

மனம் வருந்திய அவன் அந்த மலையில் மோதி கதறினான்! பின்பு அம்மலையை சற்று கவனித்தான். அது அவன் செய்த பாவங்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தது! அப்பொழுது வானத்தில் இருந்து ஒரு சொட்டு இரத்தம் அந்த மலையின் மீது விழுந்தது. மறுவினாடியே அந்த மலை கரைந்து மறைந்தது! விழித்துக் கொண்ட அவன் அந்த கனவின் பொருளை அறிய விரும்பினான்.

அப்பொழுது அவன் பார்வை தூக்கி எறியப்பட்ட வேதபுத்தகத்தின் மேல் விழுந்தது! திறந்து கிடந்த அதை அப்படியே தூக்கினான் அங்கு அவன் பார்வை இந்த வசனத்தின் மேல் விழுந்தது

**"இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்தி கரிக்கும்" (1 யோவா 1:7)**

முழங்காலில் நின்று தன் பாவங்களை மன்னிக்குமாறு கிறிஸ்துவிடம் மன்றாடினான். புது மனிதனானான்!.

**நெல்சன் சோபித ராஜ்**






**Before U were thought of or time had begun,**
**God had stuck U in the name of His Son.**

**And each time U pray, you'll see it's true,**
**You can't spell out JesUs and not include U.**

**You're a pretty big part of His wonderful name,**
**For U, he was born; that's why He came.**

**And His great love for U is the reason that he died,**
**It even takes U to spell crUcified.**


**Isn't it thrilling and splendidly grand,**
**He rose from the dead with U in His plan.**

**The stones split away, the gold trUmpet blew,**
**and this word ressUrection is spelled with a U.**

**When JesUs left the earth at His upward ascension,**
**He felt there was one thing He just had to mention.**


**"Go into the world and tell them it's true,**
**That I love them all-Just like I love U.**

**So many great people are spelled with a U**
**Don't they have the right to know JesUs too?**




**It all depends now on what U will do,**
**He'd like them to know, but it all starts with U.**

# வீறு கொள்வோம்:
# நாம் தென் இந்திய திருச்சபையினர்




உலகத் திருச்சபை வரலாற்றில் செப்டம்பர் 27, 1947 ஓர் பொன்னாள். காரணம், உலகின் முதல் ஒன்றிய திருச்சபை என்று வரலாறு படைத்த தென் இந்தியத் திருச்சபை அன்றுதான் உருவாகிற்று. வரலாற்று சிறப்புமிக்க இந்நிகழ்ச்சி பாரத மண்ணில், அதுவும் குறிப்பாக தென் இந்தியாவில் நிகழ்ந்தேறியது தெய்வச் செயலே. இச் சிறப்புமிக்க திருச்சபையில் அங்கத்தினராயிருப்பது நமக்குப் பெருமையே.

பல்வேறு இறையியல் கோட்பாடுகளையும், பாரம்பரியங்களையும், சம்பிரதாயங்களையும் கொண்ட சபைகளும் மிஷனரி சங்கங்கள் எனும் அருட்பணி இயக்கங்களும் தத்தம் வேறுபாடுகளைக் களைந்து, ஒன்றுகூடி, இணைவது அத்துணை எளிதான செயல் அல்ல. இது திருச்சபை வரலாறு நமக்கு போதிக்கும் மறுக்கமுடியாத உண்மையாகும். புதிய ஏற்பாட்டின் காலத்தில் அப்போஸ்தலரால் உருவாக்கப்பட்ட சபைகளே இதற்கு சாட்சி பகர்கின்றன. ஆகவேதான் தென் இந்திய திருச்சபை உருவாகுவதற்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு ஜெபத்துடன் கூடிய கடின உழைப்பு தேவைப்பட்டது. வரலாற்று சிறப்புமிக்க இச்சபையைப் புரிந்துகொள்ளவும் அதினிமித்தம் நாம் பெருமிதம் கொள்ளவும் சபை வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்த்தல் உதவும்.


## மிஷனரி சபைப் பிரிவுகள்

இந்திய சீர்திருத்த திருச்சபை வரலாறு 18ம், 19ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் தோன்றி, இந்தியாவில் சுவிசேஷ ஊழியம் செய்த, அருட்பணி இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்புடையது. இவற்றுள் பெரும்பான்மையானவை, சுவிசேஷ வேட்கைகொண்ட, பல்வேறு மேலை நாட்டு சபைப் பிரிவுகளைச் சார்ந்த இறைமக்களால் நிறுவப்பட்டவை. எனினும், இச்சபைகளின் இறையியல் நம்பிக்கை, பாரம்பரியங்கள், சபைக் கட்டமைப்புகள் ஆகியவை மிஷனரி சங்கங்களால் பின்பற்றப்பட்டன.

ஆகவே, இச்சங்கங்களின் ஊழியத்தால் உருவான சபைகள் சங்கத் தொடர்புடையத் தாய்த் திருச்சபையின் சாயலைப் பெற்றன. அதன் அடிப்படையில், இந்திய மண்ணில் தோன்றிய சபைகள் சம்பந்தப்பட்ட தத்தம் சங்கங்களின் பெயர்களைத் தாங்கி வளர்ந்தன. எடுத்துக்காட்டாக: இங்கிலாந்து ஆங்கிலிக்கன் திருச்சபையைப் பின்னணியாகக் கொண்ட SPG (Society for the Propagation of the Gospel) and CMS (Church Missionary Society) சங்க சபைகள்; இங்கிலிஷ், அமெரிக்கன் மெத்டிஸ்ட் சங்க சபைகள்; ஸ்காத்லாந்து, அயர்லாந்து, அமெரிக்கப் பிரஸ்பிடேரியன் சபைகள்; லண்டன் மிஷனெரி சங்க சபை; ஜெர்மன், சுவீடன், அமெரிக்க லூத்திரன் சங்க சபைகள்; கனடா, அமெரிக்கா நாடுகளைச் சேர்ந்த பாப்திஸ்டு சங்க சபைகள்.

## அருட்பணி இயக்க ஒத்துழைப்பு, கூட்டுறவு

*19ம்* நூற்றாண்டு – சுதந்திர வேட்கையும், போராட்டங்களும் பல்வேறு தேசிய இனங்களால் பிரிந்து வாழ்ந்த இந்தியர்களைப் பெருமளவில் ஒன்றுகூட்டிய காலமது. அதன் தாக்கம் இந்திய சபைப் பிரிவுகளிலும் தென்பட்டது. சிறுபான்மை கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட பொதுவான சிக்கலகள் சபைத்தலைவர்களை அடிக்கடி தத்தம் பகுதிகளில் ஒன்றுகூடிவரச் செய்தன. இந்திய ஆயர்கள், மிஷனரிமாரது சபைகடந்த சந்திப்புக்கள் அருட்பணி இயக்கங்களுக்கிடையே கூட்டுறவும் ஒத்துழைப்பும் ஏற்பட வழிகோலிற்று



"நாம் நடத்தவிருக்கும் 'திருச்சபை ஒருமைப்பாடு பட்டறை''நம் சபை மூப்பர்கள் இந்நிகழ்ச்சி குறித்த நாள், நேரம், பங்கேற்பவர் பெயர்-சிட்டையின் (Name tag) நிறம் பற்றிய ஏகமனதான முடிவுக்கு வரும் வரை கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது"

வளர்ந்துவரும் கூட்டுறவுக்கு அடையாளமாக *1855ம்* ஆண்டு கல்கத்தா நகரில் ஐரோப்பிய சபைகள், மிஷனரி சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் முதன்முதலாக் கூடினர். இதன் தொடர்ச்சியாக, *1872ல்* பத்து ஆண்டுகட்கு ஒருமுறை கூடிய கலந்துரையாடல் மாநாட்டின் முதல் அமர்வு நடைபெற்றது. *1902ம்* ஆண்டு கூடிய மாநாட்டில் மிஷனரி சங்கங்கள் பணியாற்றும் இடங்களில்

அவர்களுக்கிடையே போட்டியோ சச்சரவோ ஏற்படாவண்ணம் பணியிடங்களை தங்களுக்கெனப் பிரித்து ஒதுக்கிக்கொள்ளும் 'காமிடி' (comity) என்ற கொள்கை ஒத்துக்கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, 1910ம் ஆண்டு வரலாற்று சிறப்புமிக்க அகில உலக மிஷனரி மாநாடு (World Missionary Conference) எடின்பரோ நகரில் நடைபெற்றது. நான்கு ஆண்டுகள் கழித்து மேநாட்டு மிஷனரிகளும் மிஷனரி சபைகளின் இந்திய சபைத் தலைவர்களும் சம பங்காளிகளே என்ற புதிய கண்ணோட்டத்துடன் தேசிய மிஷனரி மன்றம் (National Missionary Council of India) ஏற்படுத்தப்பட்டது. இம்மன்றம் 1923ல் தேசிய கிறிஸ்தவ மன்றம் (National Christian Council) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இதற்கிடையே, 1921ம் ஆண்டு பன்னாட்டு மிஷனரி மன்றம் (International Missionary Council) உருவானது.

படிப்படியாக வளர்ந்துவந்த கூட்டுறவும் ஒத்துழைப்பும் மிஷனரி சங்கங்கள் ஏற்கனவே நடத்திவந்த நிறுவனங்களிலிலும் புதிதாகத் துவங்கப்பட்டவற்றிலும் வெளிப்படத் துவங்கியது. சென்னை கிறிஸ்தவ கல்லூரியைத் (Madras Christian College) தொடங்கி நிர்வகித்து வந்த Free Church of Scotland Mission 1887ல் தங்கள் கல்லூரி நிர்வாகத்தில் CMS, Wesleyan Methodist Missionary Society ஆகிய புற-சங்கங்களை உடன் பங்காளிகளாக ஏற்றுக்கொண்டது. லண்டன் மிஷனரி சங்கத்தால் (London Missionary Society) 1840ல் துவங்கப்பட்ட பெங்களூர் இறியியல் குருத்துவக் கல்லூரி (Bangalore Theological Seminary) 1910ம் ஆண்டு Wesleyan Methodist Missionary Society, The United Free Church of Scotland, the Arcot Mission of the Reformed Church in America, Jaffna College Trustees and Scotland's Society for Promoting Christian Knowledge ஆகியப் புற சங்கங்களின் சேர்க்கையால் தென்னிந்திய இலங்கை ஐக்கிய இறையியல் கல்லூரி (United Theological College of South India and Ceylon) என்ற புதிய அடையாளம் பெற்றது.

புகழ்பெற்ற மருத்துவர் ஐடா ஸ்கட்டர் வேலூரில் துவங்கி நடத்திவந்த மருத்துவப் பள்ளி (Medical School) 1918ல் புற சங்கங்களின் இணைப்பால் ஒன்றிய மிஷன் பெண்கள் மருத்துவப் பள்ளியாக (Union Mission Medical School for Women) மாறியது. இப்பள்ளியே சில ஆண்டுகளுக்குப்பின் உலகப் பிரசித்திபெற்ற கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியாக (Christian Medical College) வளர்ச்சி பெற்றது.

மிஷனரி சங்கங்களின் கூட்டுமுயற்சியாக உருவானது ஆந்திரா-இராயலசீமாவிலுள்ள ஆரோக்கியவரம் என்னுமிடத்தில் அமைக்கப்பெற்ற அனைத்திந்திய மிஷன் காசநோய் நல்வாழ்விடம் (All India Mission Tuberculosis Sanatorium) ஆகும்.

## ஐக்கியத் திருச்சபையை நோக்கி

அருட்பணி இயக்கங்களிடையே வளர்ந்த ஒத்துழைப்பும் கூட்டுறவும் அவற்றின் கட்டுப்பாட்டிலிருந்த சபைகள் ஒன்றாக ஓர் உடல்போல் இணைய வழிவகுத்தது. இச்சபைகள் ஒன்றிப்பு மூன்று நிலைகளில் ஏற்பட்டது: முதலாவது, ஒரே பாரம்பரியத்தை சேர்ந்த சபைகள் ஒன்றாதல். உதாரணம்: 1901ல் உருவான தென் இந்திய பிரஸ்பிடேரியன் திருச்சபை (Presbyterian Church of South India); அதன்பின்பு, 1904ல் இந்திய பிரஸ்பிடேரியன் திருச்சபை (Presbyterian Church in India). அவ்வாறே, கட்டற்ற (Congregationalist) சபைப் பாரம்பரியத்தைச் சார்ந்த லண்டன் மிஷன், அமெரிக்கன் மதுரை மிஷன் ஆகியவை 1905 ஒன்றிணைந்தன.

இரண்டாவது, ஒன்றுக்குமேற்பட்ட பாரம்பரிய சபைகள் கூட்டாட்சி முறையில் ஒன்றிணைவது: 1908ம் ஆண்டு பிரஸ்பிடேரியன் மிஷன் சபைகளும் காங்கிரிகேஷனிஸ்ட் சபைகளும் சேர்ந்த தென் இந்திய ஒன்றிணைந்த திருச்சபை (South India United Church), அவ்வாறே, 1924ல் உருவான ஒன்றிணைந்த வட இந்திய திருச்சபை.

முடிவில், தென் இந்திய திருச்சபை செப்டம்பர் 27, 1947 அன்று உலகின் முதல் தனித்தியங்கும், தன்னாட்சி பெற்ற அமைப்பாக உருவானது. இவ்வமைப்பில் தென் இந்திய ஒன்றிணைந்த திருச்சபை (SIUC) தென் இந்திய ஆங்கிலிக்கன் மறை மாவட்டங்கள் (Anglican dioceses in South India), தென் இந்திய இங்கிலிஷ் மெதடிஸ்ட் சபைகள், பாஸல் மிஷன் சபைகள் ஆகியவை ஒன்றாயின. உலகளவில் முதன்முதலாக, பேராயர் தலைமையில் இயங்கும் எபிஸ்கோபலியன் சபைகளும், பேராயர் தலைமையற்றப் பிற சபைகளும் ஓர் திருச்சபையாக உருவெடுத்தது நம் தென் இந்திய திருச்சபையே. வரலாற்று சிறப்புமிக்க இச்சபையின் துவக்க விழா சென்னை பரி. ஜார்ஜஸ் கதீட்ரல் ஆலயத்தில் திருவிருந்து ஆராதனையுடன் நடந்தேறியது.

## வரலாற்று சிறப்பிடம் பெற்ற தமிழ்த் திருச்சபைத் தலைவர்கள்



அருள்திரு. வேதமுத்து சாந்தியாகோ



அருள்திரு. அசரியா



பேராசிரியர் ஜே. வசந்தன்

திருச்சபை ஒற்றுமைக்கு தென் இந்தியா ஏற்றதொரு புலமாக அமைந்தது கடவுள் கிருபையே. இதில் தமிழ்த் திருச்சபைத் தலைவர்கள் ஆற்றிய பங்கு தலையாயது. இந்திய திருச்சபை சார்பாக முன்னின்ற தலைவர்கள் இருவரும் தமிழர்களே. ஒருவர், தென் இந்திய ஒன்றிணைந்த திருச்சபைத் தலைவரான (Moderator) அருள்திரு. வேதமுத்து சாந்தியாகோ (வத்தலகுண்டு, மதுரை); மற்றவர், ஆங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த அருள்திரு. வேதநாயகம் சாமுவேல் அசரியா (வெள்ளாளன்விளை, திருநெல்வேலி) ஆவர். மட்டுமல்ல, தென் இந்திய திருச்சபையின் 'That they all may be one' என்ற வாசகத்துடன் வெள்ளைத் திரையில், தாமரை மலரின்மேல் சிலுவை அமைந்துள்ள அடையாளச் சின்னத்தை (logo) வடிவமைத்த பேராசிரியர் ஜே. வசந்தன் (அமெரிக்கன் கல்லூரி, மதுரை) அவர்களும் தமிழரே.

**தென் இந்திய திருச்சபை அங்கத்தினர் நாம் எனப் பெருமிதம் கொள்வோமா?**

**— ஸ்டேன்லி ஜா.கு. தங்கராஜ்**

# பாடல் பிறந்த கதை




இப்பாடல் ஒலிக்காத கிறிஸ்தவ திருமணங்களே இல்லை எனலாம். பிரசித்திப் பெற்ற அதே நேரத்தில் அர்த்தச் செறிவுள்ள இப்பாடல் தோன்றிய வரலாறு.

1924 ஆம் ஆண்டிலே, இந்திய மிஷனெரி சங்கத்தின் முதல் மிஷனெரியும் பல கீர்த்தனைகளை இயற்றியவருமான அருள்திரு சாமுவேல் பாக்கியநாதன் ஐயரவர்களின் மகன் ஆடிட்டர் அசரியா பாக்கியநாதன் அவர்களுக்கு, சென்னை தூய எப்பா பள்ளியில் ஆசிரியையாக பணிகொண்டிருந்த யுனிஸ் அவர்களை திருமணம் செய்ய நிச்சயக்கப்பட்டது. மணமகளின் தகப்பனார் அருள்திரு. டி.எஸ்.டேவிட் ஐயரவர்கள் ஊழியம் செய்து கொண்டிருந்த பண்ணைவிளை ஆலயத்திலே திருமணம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மணமகனின் உறவினர்கள் மருதகுளத்திலிருந்து பண்ணைவிளை வந்திருந்தார்கள்.

திருமணத்திற்கு முந்தைய நாள் மதியம் மணமகனின் உறவினர்கள் பண்ணைவிளை வரும் வழியிலே பெருங்குளத்தில் தங்கி ஓய்வு எடுத்தார்கள். அந்த குளம் உயர்சாதியினர் மட்டுமே குளிக்கக் கூடிய குளம் என்பதை அறியாத அவர்கள் அதில் குளித்தார்கள். இதை அறிந்த அவ்வூரைச் சேர்ந்த உயர்சாதியினர் மணமகனின் உறவினர்களைச் சூழந்து கொண்டு பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களை விட தாழ்ந்த சாதியினரான மணமகனின் உறவினர் குளித்ததால் குளம் தீட்டுப்பட்டு விட்டதாகவும், அதனால் அவர்களின் விக்கிரகங்' களை அதில் குளிப்பாட்ட இயலாது என்பதும் அவர்களின் குற்றச்சாட்டு. சிலமணி நேரங்களுக்குப் பிறகு இதைக்

கேள்விப்பட்ட உள்ளூர் கிறிஸ்தவர்கள் எப்படியோ மணமகனின் வீட்டாரை மீட்டு பத்திரமாக அனுப்பி வைத்தனர்.

இச்செய்தி மணமகனின் தந்தை அருள்திரு. சாமுவேல் பாக்கியநாதன் ஐயரவர்கள் காதை எட்டியபோது ஜனங்களின் மனக்கண்கள் சாத்தானால் குருடாக்கப்பட்டிருப்பதை நினைத்து வருந்தினார். வீசிரோ வான ஜோதி கதிரிங்கே (இருளிலே நடக்கிற ஜனங்கள் வெளிச்சத்திலே நடக்கும்படி உம் ஒளியை வீசச் செய்வீராக) என்னும் வரியை மறுபடியும் மறுபடியும் சொல்லிக் கொண்டிருந்தார். அன்றைய நாள் சாயங்காலத்திலேயே முழுப்பாடலையும் எழுதி மறுநாள் மகனின் திருமணத்தில் பாடினார்கள்.

ஒவ்வொரு முறையும் இப்பாடலைப் பாடும் போது, நம்முடைய வாழ்வின் இருளை நீக்க, உலகின் ஒளியாக வந்த இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்ற பாரத்துடன் எழுதப்பட்டதை நினைவு கூறுவோம்.



தென் இந்திய தமிழ் திருச்சபை -அலைன

# CSI Tamil Parish

Al-Ain, United Arab Emirates




| Sl. No | Grade | Group Name | Competition Type | Theame | Duration MAX |
|---|---|---|---|---|---|
| 1 | Pre/Play School | Pre School | Fancy Dress | Bible Characters | 1 min |
| | | | Singing | Any Christian Song with Action | 2 mts |
| | | | Memory Verse | Any number of verses from any portion in the bible. | |
| 2 | KG1 & KG2 | Kinder | Fancy Dress | Bible Characters | 1 min |
| | | | Singing | Any Christian Song with Action | 2 mts |
| | | | Memory Verse | Any number of verses from any portion in the bible. | |
| 3 | Grade 1 & 2 | Beginner | Fancy Dress | Bible Characters | 1 min |
| | | | Singing | Any Christian Song with Action | 2 mts |
| | | | Memory Verse | Any number of verses from any portion in the bible. | |
| 4 | Grade 3 & 4 | Primary | Fancy Dress | Bible Characters | 1 min |
| | | | Singing | Any Christian Song | 2 mts |
| | | | Memory Verse | Any number of verses from any portion in the bible. | |
| 5 | Grade 5, 6 & 7 | Junior | Elocution Competition | From the book of Daniel | 3 min |
| | | | Singing | Any Christian Song | 2 mts |
| | | | Memory Verse | Any number of verses from any portion in the bible. | |
| 6 | Grade 8&above | Teen | Elocution Competition | From the book of Esther | 3 min |
| | | | Singing | Any Christian Song | 2 mts |
| | | | Memory Verse | Any number of verses from any portion in the bible. | |

We encourage parents to motivate your children to participate on all the competitions on their group
"WINNING PRIZE IS NOT IMPORTANT BUT PARTICIPATION FOR THE GLORY OF GOD IS IMPORTANT"

No Registration Fees for any competitions
Please register and confirm your participation on or before 11th October 2019.

**Free entry!**

**Competition Date : 25th October 2019**

Except Memory Verse Competetion; All other competitions will be on stage

Place: Main Sanctuary Worship Hall, CSI Tamil Parish Alain. (In Oasis campus)

Time: After the Friday worship service around 7.00PM

csitcalain@gmail.com (or) melbinpj@yahoo.co.in









## General Guidelines & Informations:

**Singing (Solo):**

Action song is preferable for preschool, kinder and beginner.
For primary, Junior & Teen, not necessary to be action song.
Tracks (karaoke) NOT allowed.
Voice and words clarity is important. Good body language is appreciated.
Should be less than two minutes. Mic will be given from Church
Songs can be from any language (Tamil or English Preferable).




**Fancy Dress:**

Only Biblical Character is Permitted.
Dress up and act portraying any biblical character
Mic will be given to speak.
Overall timing is 1 Minute. (Max)




**Memory Verse:**

Any number of bible verses can be presented.
Bible verses are not necessary to be in order (you are allowed to pick the verses randomly).
Candidates to present it to the judges verbally (Not necessary to memorize the references).
Each candidate to bring the verses on paper which they are going to present, for Judges Reference.




**Memory verse Competetion will be OFF stage.**

**Place: Parsonage, CSI Tamil Parish Alain, Date: 25th Oct 2019; Time: 9.00AM to 1:00PM**

**Elocution (Speech Competition)**

The book of Daniel and the book of Esther are only references.
Candidate are free to make their own title and script with in the above 2 reference books.
Innovative ideas and presentation skills are appreciated.
Overall timing is 3 Minutes. (Max)





**For further clarification and registration please contact Mr.Melbin Paul @ 0564411225.**







**PRAISE HARVESTER** A Joyful 'toon by Mike Waters





May the peoples praise you, O God; may all the peoples praise you. Then the land will yield its harvest, and God, our God, will bless us. — PSALM 67:5–6 NIV

## Parents... narrate the story to ur kid...






**Helping the Week Will Make you Strong**



# June'19 Children's Quiz (Primary & Above)

**FROM THE BOOK OF I JOHN CHAPTER 1-5**
**(Referred from NIV BIBLE)**

1) A man who says "I know him" but doesn't do what he commands is called as a ________.
   a) Liar b) fool c) Cheater

2) Anyone who hates his brother is considered to be still in _________.
   a) Pit b) hatred c) darkness

3) Everyone who has hope in HIM __________ himself.
   a) Loves b) purifies c) enhances

4) Everyone who sins breaks the ___________.
   a) law b) commitment c) bond

5) For everyone who is born of God overcomes the
   a) Sin b) pain c) world

COMPLETE THE VERSE:

6) "If we claim to have ________ with him yet walk in _________, we lie and don't live by ________"

7) "The world and its ________ pass away but the man who ________ the __________ of God _________ forever"

8) "Whoever does not ______ does not know God, because God is _______"

9) How can you recognize the spirit of God?

10) What is the reason that the world doesn't know the child of god?

**Last Month Children's Quiz Correct Answers:**
**Sep- 2019**

**From the Book of Prov 26 to 31**

1) b) fool (26:11)
2) a) heart (27:19)
3) a) roaring lion (28:15)
4) c) pride (29:23)
5) a) a rod of correction (29:15)
6) lying, flattering (26:28)
7) wounds, enemy (27:6)
8) neighbor, net (29:5)
9) word, flawless, refuge (30:5)
10) charm, beauty (31:30)

# Congratulations!

**Kids who did the Coloring**

Crasslin Devona / Ridhun Yojit / Rishon Yojit
Reagan Shan / Hartlyn Herchil
Johan Sanjo / Jason Eric
Eion Jayden/ Jonathan
Jeremiah / Jemima

**Children who wrote the Children's Quiz Correct Answers:**

Roshan, Shelbino, Eastrine, Annlin, Angelin, Joshua

**Children who successfully did the Bible Word Search**

Roshan, Ridhun, Shelbino, Johan Sanjo, Dennis
Earline, Jonathan, Eric Jaden, Joshua, Jeremiah


**Children who successfully did the Bible Cross Word**

Roshan, Shelbino, Annlin, Angelin,
Joshua, Jonathan

**July–Aug'19 - Names Missed In Manna**

Diniya - Bible Cross Word

# Kids Coloring (Kinder & Beginner)



## HAPPY HARVEST FESTIVAL



## GET READY KIDS




Dear Kids... Write your name... here...

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# Bible Cross Word (Primary & Above)

## A Glance at Ruth




1) Who ruled the land of Canaan when there was famine?

2) How many persons belonged to the family of Emilelech?

3) To which town did Ruth return with her mother in law?

4) Who married Ruth after she was widowed?

5) Who was the great grandson of Ruth?

6) Who was the son of Ruth?

7) Mother in law of Ruth

8) Meaning of Mara

9) Ruth was from which country?

10) Ruth's sister in law____

11) Sons of Emilelech

**Your Name Plz..**

# Bible Word Search (Beginner & Primary)

Wordsearch 182 Rev.5:8-14

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| D | T | I | M | E | S | T | G | L | O | R | Y | H | L | R |
| O | A | E | W | O | R | T | H | Y | P | H | T | R | A | E |
| G | N | C | P | I | T | O | S | R | L | G | T | W | L | I |
| W | G | R | B | U | N | E | A | E | N | L | O | H | L | G |
| I | E | E | E | O | R | I | L | E | I | R | E | M | O | N |
| S | L | A | R | G | S | C | R | P | S | R | O | F | R | O |
| D | S | T | L | E | N | T | H | H | O | D | P | N | C | I |
| O | R | U | I | T | S | I | I | A | G | E | E | G | S | T |
| M | D | R | A | E | H | P | V | N | S | V | P | N | A | A |
| S | R | E | D | L | E | G | I | I | A | E | H | I | N | N |
| S | T | S | E | D | O | K | V | E | L | U | D | G | G | I |
| S | E | N | O | R | H | T | H | O | U | S | A | N | D | A |
| E | G | A | U | G | N | A | L | R | I | E | J | I | O | L |
| D | O | O | L | B | R | E | W | O | P | C | I | S | C | S |
| L | A | M | B | S | S | E | R | V | E | N | E | M | A | E |

AMEN
ANGELS
BLOOD
EARTH
ELDERS
FELL
GLORY
GOD
HEARD
HEAVEN
HONOR
KINGDOM
LAMB
LIVING
NATION
PEOPLE
POWER
PRAISE
PRIESTS
REIGN
SANG
SCROLL
SEALS
SERVE
SLAIN
THRONE
TIMES
TRIBE
VOICE
WEALTH
WISDOM
WORTHY
THOUSAND
PURCHASED
CREATURES
LANGUAGE
STRENGTH
WORSHIPED
SINGING

After you find all the hidden words the left over letters spell out a Bible verse reading from the top left to the bottom right

___ ___ ___________ _________

Psalm 64

**Your Name:**




# வேத வினா-விடை போட்டி
## (எசேக்கியேல் 26–35)

1. யாரை பெலப்படுத்தி, யாரை விழுந்துப்போக பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார்?
2. தீருவில் சீரியர்கள் விற்க வந்தவைகள் எவை?
3. இரத்தப்பலி தன்மேல் சுமராமல் தன் ஜுவனை தப்ப பண்ணுகிறவன் யார்?
4. பூமியெல்லாம் மகிழும் போது நீ பாழாயிருப்பாய் என்று கர்த்தர் யாரை சொல்கிறார்?
5. உன்னை பூமியின் மிருகங்களுக்கும், ஆகாயத்தின் பறவைகளுக்கும் இரையாக கொடுப்பேன் என்று கர்த்தர் யாரை குறித்து சொல்கிறார்?
6. உன்னை மகா பயங்கரமாக வைப்பேன், இனி நீ இருக்கமாட்டாய் என்று கர்த்தர் யாரை சொல்கிறார்?
7. பால சிங்கத்துக்கு ஒப்பானவன் யார்?
8. யாருடைய வீதிகளில் இரத்தத்தையும், கொள்ளை நோயையும் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார்?
9. தீருவுக்கு விரோதமாக வரும் ராஜா யார் எங்கிருந்து,எப்படி வருவார்?
10. கர்த்தர் சொல்லிய இஸ்ரவேலின் அதிபதி யார்?

ஜெனிபர் பால்

**Sep'19 மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

திரு. M.C கிறிஸ்டோபர்

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்

திருமதி. ஜெனிபர் பால்

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. எபென் A.பிரசாத்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. பெட்ரீஷியா ஜேசன்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி. சிந்துஜா சதீஷ்

செல்வி. திவ்யா ஷரின்

செல்வி ஜெரின் மகதலேன்

**கடந்த மாதத்திற்கான விடைகள்**

1. எசே 18: 6–9 / 2. எசே 22: 26 / 3. எசே 25: 2–4
4. எசே 16:49 / 5. எசே 24:16 / 6. எசே 20:13
7. எசே 21: 9,10 / 8. எசே 23: 37,38



## பிறந்தநாள் ஆசரிப்போர் Birthday Celebrants

| | |
|---|---|
| 01-Oct | Mrs. John Gerald Sheeba Derick |
| 01-Oct | Mrs. Fanny Esther |
| 01-Oct | Baby. H. Johanna Jane |
| 04-Oct | Mr. Praveen Paul |
| 04-Oct | Mr. Antony Lerinson |
| 05-Oct | Mr. Immanuel Suthan |
| 05-Oct | Baby. Nivina Chandrasekar |
| 07-Oct | Mr. Sharvin John |
| 08-Oct | Ms. Akila |
| 09-Oct | Ms. D.P. Mercy |
| 11-Oct | Mr. Prabu Dinesh Kumar |
| 12-Oct | Mr. Arun Jose |
| 13-Oct | Mrs. Anitha George |
| 15-Oct | Ms. Erline Bernice Raj |
| 15-Oct | Mstr. Jovin |
| 15-Oct | Mr. Godson Daniel Rao |
| 17-Oct | Ms. Akshaya Kannan |
| 17-Oct | Mrs. Sahila Grace Justin |
| 18-Oct | Mrs. Helen Hemabai |
| 20-Oct | Ms. Aidean Joyphonse Derick |
| 20-Oct | Mrs. Patricia Santhi |
| 22-Oct | Mrs. Sheeba Deva Prakash |
| 23-Oct | Mrs. Biblin Christabel |
| 24-Oct | Mr. Justin Oliver |
| 27-Oct | Mr. Jayan Dharmaraj |
| 29-Oct | Baby. Abigail Christine |
| 31-Oct | Mstr. Eion Jayden |







## திருமணநாள் ஆசரிப்போர் / Wedding Anniversary

| | |
|---|---|
| 05-Oct | Mr. Ravindra & Mrs. Sunitha Ravindra |
| 11-Oct | Mr. Daniel Durai Singh & Mrs. Pamela Rachel |
| 21-Oct | Mr. Prabu Dinesh Kumar & Mrs. Rebecca |



**For by me your days will be multiplied, and years will be added to your life. Proverbs 9:11**

# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

| CSI Tamil Parish Family No: 064 | Mobile no: 056 6411676 |
|---|---|
| Mr.Lawrence Gambeeram (Head) |  |
| Mrs. Augusta Lawrence (Wife) | |
| Ms. Mervin Samuel (Son) | |
| Location in India:<br>Tambaram<br>Chennai, Tamilnadu | |

| CSI Tamil Parish Family No: 070 | Mobile no: 05 440 440 38 |
|---|---|
| Mr. Ravindra (Head) |  |
| Mrs. Sunitha Ravindra (Wife) | |
| Mr. Richard (Son)<br>Mr. Roshan (Son) | |
| Location in India:<br>Patelnajundappa St,<br>M.S Nager, Bangalore | |

| CSI Tamil Parish Family No: 071 | Mobile no: 055 640 0635 |
|---|---|
| Mr. David Sornabalan (Head) |  |
| Mrs. Yesubai (Wife) | |
| Ms. Shiny Rebecca (Daughter)<br>Mr. Immanuel Suthan (Son) | |
| Location in India:<br>Kottaiyadi, Swamithopu<br>K. K. Dist., Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 072 | Mobile no: 056 399 6933 |
|---|---|
| Mr. Jason Samuel (Head) |  |
| Mrs. Patricia Shanthi (Wife) | |
| Mstr. Eric Jayden (Son)<br>Mstr. Eion Jayden (Son) | |
| Location in India:<br>Kallakuruchi, Villupuram Dist.<br>Tamilnadu. | |




| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம்,<br>கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர்<br>குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/– Month | AED 450/– Month |
| **இணைந்து மிஷனரி ஊழியத்தை கட்டுவோம் வாருங்கள்.**<br>ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க முன்வர உங்களை அன்போடு அழைக்கிறோம் | | |

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**

*Your name / Quiz type / Month-Year*

***Church Email: csitcalain@gmail.com***

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

*You can also download our Monthly Manna by visiting our Church Website*

***http://www.csitamilparishalain.org***

*சர்ச் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

# DAILY BIBLE READING OCTOBER – 2019

## “Your word is a lamp to my feet and light for my path”

| *Date* | *Morning / காலையில்* | | ✓ | *Evening / மாலையில்* | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| *1* | எபேசியர் 1 | Ephesians 1 | | *1 இராஜா 3* | I Kings 3 | |
| *2* | எபேசியர் 2 | Ephesians 2 | | *1 இராஜா 4-5* | I Kings 4 - 5 | |
| *3* | எபேசியர் 3 | Ephesians 3 | | *1 இராஜா 6* | I Kings 6 | |
| *4* | எபேசியர் 4 | Ephesians 4 | | *1 இராஜா 7* | I Kings 7 | |
| *5* | எபேசியர் 5 | Ephesians 5 | | *1 இராஜா 8* | I Kings 8 | |
| *6* | எபேசியர் 6 | Ephesians 6 | | *1 இராஜா 9* | I Kings 9 | |
| *7* | பிலிப்பியர் 1 | Philippians 1 | | *1 இராஜா 10* | I Kings 10 | |
| *8* | பிலிப்பியர் 2 | Philippians 2 | | *1 இராஜா 11* | I Kings 11 | |
| *9* | பிலிப்பியர் 3 | Philippians 3 | | *1 இராஜா 12* | I Kings 12 | |
| *10* | பிலிப்பியர் 4 | Philippians 4 | | *1 இராஜா 13* | I Kings 13 | |
| *11* | கொலோ 1 | Colossians 1 | | *1 இராஜா 14* | I Kings 14 | |
| *12* | கொலோ 2 | Colossians 2 | | *1 இராஜா 15* | I Kings 15 | |
| *13* | கொலோ 3 | Colossians 3 | | *1 இராஜா 16* | I Kings 16 | |
| *14* | கொலோ 4 | Colossians 4 | | *1 இராஜா 17* | I Kings 17 | |
| *15* | 1 தெசலோ 1 | I Thessalo 1 | | *1 இராஜா 18* | I Kings 18 | |
| *16* | 1 தெசலோ 2 | I Thessalo 2 | | *1 இராஜா 19* | I Kings 19 | |
| *17* | 1 தெசலோ 3 | I Thessalo 3 | | *1 இராஜா 20* | I Kings 20 | |
| *18* | 1 தெசலோ 4 | I Thessalo 4 | | *1 இராஜா 21* | I Kings 21 | |
| *19* | 1 தெசலோ 5 | I Thessalo 5 | | *1 இராஜா 22* | I Kings 22 | |
| *20* | 2 தெசலோ 1 | 2 Thessalo 1 | | *2 இராஜா 1* | 2 Kings 1 | |
| *21* | 2 தெசலோ 2 | 2 Thessalo 2 | | *2 இராஜா 2* | 2 Kings 2 | |
| *22* | 2 தெசலோ 3 | 2 Thessalo 3 | | *2 இராஜா 3* | 2 Kings 3 | |
| *23* | 1 தீமோத் 1 | I Thimothy 1 | | *2 இராஜா 4* | 2 Kings 4 | |
| *24* | 1 தீமோத் 2 | I Thimothy 2 | | *2 இராஜா 5* | 2 Kings 5 | |
| *25* | 1 தீமோத் 3 | I Thimothy 3 | | *2 இராஜா 6* | 2 Kings 6 | |
| *26* | 1 தீமோத் 4 | I Thimothy 4 | | *2 இராஜா 7* | 2 Kings 7 | |
| *27* | 1 தீமோத் 5 | I Thimothy 5 | | *2 இராஜா 8* | 2 Kings 8 | |
| *28* | 1 தீமோத் 6 | I Thimothy 6 | | *2 இராஜா 9* | 2 Kings 9 | |
| *29* | 2 தீமோத் 1 | 2 Thimothy 1 | | *2 இராஜா 10* | 2 Kings 10 | |
| *30* | 2 தீமோத் 2 | 2 Thimothy 2 | | *2 இராஜா 11-12* | 2 Kings 11-12 | |
| *31* | 2 தீமோத் 3,4 | 2 Thimy 3,4 | | *2 இராஜா 13* | 2 Kings 13 | |


HARVEST
Give thanks to the Lord, for he is good; His love endures forever -1 Chronicles 16:34
FESTIVAL
THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA
CSI TAMIL PARISH, AL-AIN
தென்னிந்தியத் தமிழ் திருச்சபை, அலைன்
You are Invited
Harvest
FESTIVAL
18
OCT
Venue
Evangelical Church Center,
Oasis Hospital Campus,
Al Ain
Games & Activities
for Kids
Lots of
Food varieties
&
Auction
Give
Thanks
Contact Details :
Rev. Christopher Rajendran
Mob : 056 710 5082
Mr. A.S Kannan 050 482 1006